IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:112/2017

**DEP OF WITNESS:**PW2 NAME:Chandran Date: 05-08-2022

**2 மற்றும் 3வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. என்னை முனிரத்தினம் அழைத்ததின் பேரில் சாட்சியம் சொல்ல வந்தேன். வாதி முனிரத்தினமும் பிரதிவாதி கோவிந்தசாமியும் உறவினர் அல்ல ஒரே தெருவில் வசிப்பவர்கள். வாதி முனிரத்தினம் பிரதிவாதி கோவிந்தசாமி மீது வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் தெரியும் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது. கோவிந்தசாமி தான் முனிரத்தினம் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத படிக்க ஓரளவிற்கு தெரியும். எனது முதல்விசாரணையில் கூறியதுபோல் எந்தபத்திரத்தில் எதற்காக கையொப்பமிட்டேன் என்றால் முனிரத்தினம் 24.11.2008ம் ஆண்டு சர்வே எண்.12/எ1, 48/1எ, 49/2எ காக்காதோப்பு நிலம் வாங்குவது சம்பந்தமாக கையொப்பமிட்டேன். வா.சா.ஆ.2ல் உள்ள சாட்சி பட்டியலில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போல் 22.11.2008 சாட்சியாக கையொப்பமிட்டேன் என்று கூறியது போல் வா.சா.ஆ.2 கையொப்பம் என்னுடையது இல்லை. 1ம் பிரதிவாதி கோவிந்தசாமிக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் யார் யார் எல்லாம் பிரதிவாதியாக உள்ளார்கள் என்ற விவரம் தெரியாது. வாதி முனிரத்தினத்தின் மனைவி உஷா அவர்களை தெரியும். 1ம் பிரதிவாதி கோவிந்தசாமிக்கும எனக்கும் உரிமையியல் வழக்கு உயர்நீதி மன்றத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கோவிந்தசாமி என் மீதும் எனது குடும்பத்தார் 11 பேர்கள் அவர்கள் மீதும் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து உயர்நீதி மனறம் வரை வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கின் உயர்நீதி மன்ற உத்தரவு என்னிடம் காண்பிக்கப்பட்டது தான் என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தின் உத்தரவின் சர்ட்டிபிகேட் காப்பி பி.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து சீனனுக்கு எப்படி வந்தது என்றால் பூர்வீக சொத்து என்பதால் அவருக்கு பாகபிரிவினைபடி பாத்தியப்பட்டதாகும். சீனனின் குடும்பத்தார் காசிநாத கவுண்டர் காளியம்மாள் ஆகியோருக்கிடையே பாகபிரிவனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சீனனுக்கு சீனிவாசனுக்கு என்று முன்னோர்கள் வைத்த பெயர் தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அவர் சீனன் என்று தான் கையொப்பமிடுவார். சீனன் உண்மையான பெயர் சீனிவாசன் தான் அவர் சீனன் என்று கையொப்பமிடமாட்டார் என்றும் நான் வாதியும் சேர்ந்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கூறுவது போல் வாதி அனுபவிக்கவில்லை என்றாலும் நான் இவ்வழக்கிற்காக வாதியுடன் சேர்ந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. சீனிவாசன் இறந்தபின்பு பொய்யான ஆவணங்களை தயார்செய்து பிரதிவாதி சட்ட அறிவிபபு அனுப்பிய பிறகு தான்

பொய்யான ஆவணங்களை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால்சரியல்ல. சீனிவாசன் உயிருடன் இருக்கும்போது இந்த ஆவணங்களை தாக்கல் செய்திருந்தால் உண்மை வெளி வந்திருக்கும் என்பதால் அவர் இறந்த பின்பு பொய்யான ஆவணங்களை வைத்து இந்த வழக்கு தாக்கல்செ சய்துள்ளேன் என்றால் சரியல்ல. சீனிவாசனின் பெயர் உண்மையினல் சீனிவாசன் தான் சீனன் கிடையாது நான் சொல்வது போல் அவர் மூதாதையர் சீனன் என்று வைக்கவில்லை அதனால் நான் சொல்லும் சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. எனககும் பிரதிவாதிக்கும் இருக்கும் முன்விரோதத்தின் காரணமாக வாதியுடன் சேர்ந்துகொண்டு பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF